**ஜனவரி - 20**

**"நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாயிருந்தால்; தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" - எபி 12:7**

சோதனைகள் மூலம்தான் ஒரு பரிபூரண பண்பை வளர்த்துக்கொள்ள முடியும். அது இல்லையேல் முடியாது. பண்பு என்பது ஒரு சிறிய செடிக்கு ஒப்பானது. ஆரம்ப நிலையில் அது மிக இளமையாக இருக்கிறது. அதற்கு தேவனுடைய அன்பாகிய சூரிய வெளிச்சம் பெரும் அளவில் அதன் நிலையில் தேவைப்படுகிறது. அவருடைய கிருபை என்னும் மழை நீர் அப்போதைக்கப்போது தேவைப்படும். இது விசுவாசம் என்னும் அடித்தளத்தையிடத் தேவை. அப்படியே கீழ்ப்படிதலை ஊக்குவிக்கவும் தேவை. அவரைப்பற்றிய குணநலங்களைப் பெற்ற அறிவின் மூலம் அப்பியாசம் செய்யும் போது இவைகள் நமக்குக் கிடைக்கிறது. இவ்வாறு சாதகமான சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட பண்பு என்னும் செடி வளர்ந்ததும், அது ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க சில கட்டுப்பாட்டிற்குள் வந்தடைய வேண்டும். இதற்குரிய பக்குவத்திற்கு தன்னை ஆயத்தம் செய்து கொள்ளுகிறது. அதே சமயத்தில் சில உபத்திரவங்களையும் தாங்குவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு சிறுகச் சிறுக ஒருவரின் குணநலங்கள் அல்லது பண்புகள் பக்குவம் அடைகிறது. அதற்கு விதிக்கப்படும் சோதனைகள் மேலும் தன் பண்பில் உறுதிபெறவும், அழகும் கிருபையும் அடையவும் பயன்படுத்தப்படுகிறது. இறுதியில் பெற்ற நற்பண்புகள் ஒருவரில் நிலைத்து விடுகிறது. அது வளர்ச்சியடைந்து ஸ்திரப்படுத்தப்படுகிறது . பரிபூரணத்தையும் அடைந்து விடுகிறது. அத்தனையும் உபத்திரவம் என்னும் பாதையைக் கடந்து வருகையில் இது சிறப்படைந்து விடுகிறது.

**- Z ’95, 107 (R 1806).**

நாம் இயல்பாகப் பெற்ற தந்தையின் மூலம் நாம் நலன் பெறுவதற்கு அவரிடத்திலிருந்து சிட்சையை பெறுகிறோம் என்றால், தம்முடைய ஆதாயத்திற்கு என்று நம் பரமபிதா நம்மை சிட்சியாமல் விடார் என்பதனை நாம் உணர வேண்டும். அப்படி பரம பிதாவினிடத்திலிருந்து நாம் எந்தவித சிட்சையையும் பெறாவிட்டால், நாம் அவருடைய குமாரனாக இருப்பது இயலாது. அப்படி சிட்சையைப் பெறுவதன் மூலம் அவர் பரம பிதாவாகவும் நாம் அவருடைய குமாரரர் என்பது நிரூபிக்கப்படுகிறது. ஆகவே சோதனைகளோ சிட்சைகளோ வருமாகில் அதன் மூலம் நாம் சோர்ந்து போகலாகாது. அதற்குப்பகரம் நாம் தேவனுடைய புத்திரராகிறோம் என்பது உறுதி செய்யப்படுகிறது. ஆகவே நாம் மேலும் மேலும் சிட்சைக்குட்பட்டு நம் குணநலங்களை வளர்த்துக் கொள்வோமாக. **-P ’26, 190.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**எபி 12:4-14; உபா 8:5; 2சாமு 7:14; யோபு 5:17; சங் 94:12; நீதி 13:13-24;19:18; 22:15; 23:13,14,24; 29:15,17; வெளி 3:19.**

**கோபுர வாசிப்பு : Z ’12, 389 (R 5147).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நல்லொழுக்கப்படுத்துவது சம்பந்தமாக என்ன அனுபவங்கள் எனக்கு நேர்ந்தது? நான் அவற்றை எவ்வாறு சகித்தேன்? அவை என்னில் என்ன பலன் செய்தன?**